# கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

## ஆங்கிலப் பாடத்துடன், பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை / கலைமானி (வெளிவாரி) முதலாம் பரீட்சை மற்றும் விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்ட முதலாம் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த ஆசிரியர்களை அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்தல்.

**2025/2026 கல்வியாண்டு**

2025/2026 கல்வியாண்டு முதல் ஆரம்பிக்கப்படவுள்ள பின்வரும் பாடநெறிகளைத் தொடர்வதற்காக இலங்கையின் அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கென, ஆங்கிலப் பாடத்துடன் பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை / கலைமானி (வெளிவாரி) முதலாம் பரீட்சை மற்றும் விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்ட முதலாம் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்து, அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I. கலைப் பட்டப் பாடநெறி (ஆங்கிலப் பாடத்துடன்)
II. விஞ்ஞானமானி பட்டப் பாடநெறி (உயிரியல் விஞ்ஞானம் / பௌதீக விஞ்ஞானம் / பிரயோக விஞ்ஞானம்)

02. விண்ணப்பதாரர்கள் இதற்கெனப் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:

I. (அ). கலைப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்காக:
2021 ஆம் ஆண்டில் அல்லது அதற்குப் பிந்திய வருடம் ஒன்றில் ஆங்கிலப் பாடத்துடன், பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை / கலைமானி (வெளிவாரி) முதலாம் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ). உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் அல்லது பிரயோக விஞ்ஞானப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்காக:
2021 ஆம் ஆண்டில் அல்லது அதற்குப் பிந்திய வருடம் ஒன்றில் விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்ட முதலாம் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

II. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று ஆசிரியராக 05 வருடங்கள் சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், உரிய ஆசிரியர் நியமனம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.

CamScanner

III. தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, தேசிய கல்வியியல் கல்லூரி, தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றின் பட்டப் பாடநெறிகளைக் கற்பதற்காகப் பதிவு செய்யாதிருத்தல்.

அல்லது

இலங்கை அரசாங்கப் பல்கலைக்கழகம் ஒன்றின் உள்வாரிப் பட்டப் பாடநெறி ஒன்றைத் (கட்டணக் கொடுப்பனவு இன்றி) தொடர்வதற்காக பதிவு செய்யாதிருத்தல்.

IV. ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தில் உள்ள உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் அல்லது பிரயோக விஞ்ஞானப் பாடநெறி சம்பந்தமாக இருக்கும் போது, உரிய பாடநெறிக்குத் தகைமை பெறுவதற்காக க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் அல்லது விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்ட முதலாம் பரீட்சையில், உரிய பல்கலைக்கழகத்தினால் முன்தேவையாகக் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

V. **முழுநேரப் பாடநெறிக்காகச் சம்பளத்துடனான கற்கை விடுமுறையைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய ஆசிரியர் ஒருவராக இருத்தல் வேண்டும். (சம்பளத்துடனான கற்கை விடுமுறையைப் பெற்றுக்கொள்வதற்கான உரித்து குறித்து நேர்முகப் பரீட்சையின் போது ஆராயப்படும்.)**

03. அரசாங்க ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலை ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் உரிய அதிபர் / முகாமையாளரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவ் விண்ணப்பப் படிவங்களில் பாடசாலை அதிபர் / முகாமையாளரால் உரிய ஆசிரியருக்கு **கற்கை விடுமுறை வழங்குவதை அங்கீகரிக்க முடியுமா / முடியாதா என்பது குறிப்பிடப்பட வேண்டும்.**

04. ஒவ்வொரு விண்ணப்பப் படிவமும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய **இரு (02) பிரதிகளாகத் தயாரிக்கப்பட்டு,**

CamScanner

2026.08.30 ஆம் திகதிக்கு முன்னர் "**கல்விப் பணிப்பாளர், மனிதவள அபிவிருத்திக் கிளை, கல்வி அமைச்சு, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல**" என்ற முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "**இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் 2025/2026 (ஆசிரியர்களுக்காக)**" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

05. இந்த அனுமதியின் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவது, ஆங்கிலப் பாடத்துடனான பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சையில் / கலைமானி (வெளிவாரி) முதலாம் பரீட்சையில் அல்லது விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்ட முதலாம் பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள், உரிய பாடத்திற்குப் பெற்ற புள்ளிகள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையிலாகும்.

06. இப்பட்டப் பாடநெறியைப் பூர்த்தி செய்ததன் பின்னர், இத்தகைமையின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர் நியமனங்களை வழங்குவது தொடர்பான பொறுப்பினை இவ் அமைச்சு ஏற்காது.

07. விண்ணப்பப்படிவமானது மூன்று மொழிகளிலும் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் **(www.moe.gov.lk)** விசேட அறிவித்தல் பலகையில் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

08. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழி வசனங்களிடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது முரண்பாடுகள் காணப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைவாகவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

CamScanner

நாலக களுவெவ
செயலாளர்
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

CamScanner